Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், அக்டோபர் 13, 2026 | இதழ் 183

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தவெக எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு!

சென்னை, 13 அக்டோபர் 2026: மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோர், சட்டப் பேரவைத் தலைவர் முன்னிலையில் இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோர், தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். இதன் ஹாரணமாக, அந்த இரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த அக்டோபர் 6-ஆம் தேதி இரு தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடைபெற்றது. இதற்கான வாக்கு எண்ணிக்கை அக்டோபர் 9-ஆம் தேதி நடைபெற்று, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதில், மதுராந்தகம் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட மரகதம் குமரவேல் சுமார் 20,040 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதேபோல், தாராபுரம் தொகுதியில் போட்டியிட்ட சத்தியபாமா சுமார் 9,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இருவரும் வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றனர். இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவைத் தலைவர்




ஜே.சி.டி. பிரபாகர் முன்னிலையில் இருவரும் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் சட்டப்பேரவை முன்னவர் செங்கோட்டையன், தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர். பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாகச் சட்டப் பேரவையில் பதவியேற்பது வழக்கம். ஆனால், இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகிய இருவரும் தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவைத் தலைவர் முன்னிலையில் தற்போது பதவியேற்றுக் கொண்டுள்ளார். இதன் மூலம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளின் புதிய சட்டமன்ற உறுப்பினர்களாக இருவரும் தங்களது பணிகளைத் தொடங்க உள்ளனர்.

# பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதில் ஒருங்கிணைந்த கொள்கைகளை வகுத்தல், சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவை முக்கியம் - குடியரசு துணைத்தலைவர்



சென்னை, 13 அக்டோபர் 2026: புதுதில்லியில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் 66-வது பயிற்சி வகுப்பில் பங்கேற்றவர்களிடையே குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் உரையாற்றினார். "இந்தியாவின் அடிப்படை மாண்புகள், தேசிய நலன்கள், தேசிய நோக்கங்கள்" என்ற கருப்பொருளில் அவர் உரையாற்றினார்.

இந்திய ஆயுதப் படையினர், குடிமைப் பணிகள், காவல்துறை, இதர அரசு அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள், நட்பு நாடுகளைச் சேர்ந்த 41 அதிகாரிகள் உட்பட மொத்தம் 122 பங்கேற்பாளர்களிடையே உரையாற்றிய குடியரசு துணைத் தலைவர், தற்போதைய பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதில் உத்திபூர்வ சிந்தனை, ஒருங்கிணைந்த கொள்கைகளை வகுத்தல், சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

தேசிய மாண்புகள், தேசிய அடையாளத்தின் அடிப்படையாகவும், உலக நாடுகளுடன் நாட்டின் ஈடுபாடுகளை வழிநடத்துவதாகவும் கூறிய திரு சி பி ராதாகிருஷ்ணன், வசுதைவ குடும்பகம் என்ற இந்தியாவின் நாகரீக தத்துவத்தை சுட்டிக்காட்டினார். கோவிட் 19 பெருந்தொற்று காலத்தின்போது இந்தியாவின் தடுப்பூசி மைத்ரி முன்முயற்சி, பேரிடரின்போது முதலில் களமிறங்கி பங்களிப்பது, பருவநிலை நடவடிக்கை, பேரிடர் மீட்புத் திறன் தொடர்புடைய சர்வதேச முன்முயற்சிகளில் நாட்டின் தலைமைத்துவம் குறித்து குறிப்பிட்டார்.

இறையாண்மை, ஜனநாயகம், மதச்சார்பின்மை, நீதி, சுதந்திரம், சமத்துவம், நல்லிணக்கம், நாட்டின் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு ஆகிய அரசியலமைப்பு மாண்புகளிலிருந்து நாட்டின் நலன்கள் உருவாகின்றன என்று குடியரசு துணைத் தலைவர் தெரிவித்தார்.

இந்தியாவின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல், ஜனநாயக, மதச்சார்பற்ற, கூட்டாட்சியைப் பாதுகாத்தல், உத்திசார்ந்த அரசியல், பொருளாதார, ராணுவ நோக்கங்களை மேம்படுத்துதல், வளர்ச்சி, மனித மேம்பாட்டிற்கான நிலையான, பாதுகாப்பான சூழலை உறுதி செய்தல், சர்வதேச அமைதி, ஸ்திரத்தன்மைக்குப் பங்களித்தல் ஆகிய ஐந்து முன்னுரிமைகளை அவர் சுட்டிக்காட்டினார்.

# மாநிலங்களை வலுப்படுத்துவதன் மூலமே இந்தியா வலிமை பெறும்: சென்னையில் பிரதமர் மோடி பேச்சு



சென்னை 13, அக்டோபர் 2026: மாநிலங்களை வலுப்படுத்துவதன் மூலமே இந்தியா வலிமை பெறும் என்று சென்னையில் நேற்று நடந்த விழாவில் பிரதமர் மோடி கூறினார். சென்னையில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் ரூ.13ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டப்பணிகளுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: புனித நவராத்திரி பண்டிகை தொடங்குகிறது.

நவராத்திரியின் இந்த நன்னாளில், சிவபெருமானுக்கும் பராசக்திக்கும் உரிய புனித பூமியான தமிழ்நாட்டில், இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னதாக ஜலகண்டேஸ்வரர் கோயிலில் சிவபெருமானின் அருளாசியைப் பெறும் நல்வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. தமிழ்நாட்டின் இந்த புனித திருத்தலத்திலிருந்து, நாட்டின் அனைத்து மக்களுக்கும் மனமார்ந்த நவராத்திரி நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலயம் முதல் மெட்ரோ சேவை வரை, தமிழ்நாட்டின் இந்த அனுபவங்கள், இன்றைய இந்தியாவின் உணர்வை பிரதிபலிக்கின்றன. முதலமைச்சராக இருந்தபோது, கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோருடன் பலமுறை உரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பிரதமரான பிறகும், ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி மற்றும் மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்.

இந்தியாவின் இந்த உற்பத்தித் துறை வளர்ச்சியில், தமிழ்நாட்டு மக்கள் போற்றத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். மேம்பட்ட மசகு எண்ணெய் உற்பத்தி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிறோம். இது இங்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், நாட்டின் இறக்குமதியைக் குறைப்பதற்கும் பெரிதும் உதவும். வலுவான உற்பத்தித் துறையை உருவாக்க நமக்குச் சிறந்த சாலைகள் தேவை. 17,000 கோடி ரூபாய் முதலீட்டில், தூத்துக்குடியில் உள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகம் உலகத்தரம் வாய்ந்த பிரமாண்டமான கொள்கலன் மற்றும் பசுமை எரிசக்தி மையமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் நிறைவடைந்ததும், உலகின் மிகப் பெரிய கொள்கலன் கப்பல்கள் கூட இங்கு எளிதாக வந்து நிற்கும் வசதி ஏற்படும். இது தமிழ்நாட்டைத் தொழில் மற்றும் போக்குவரத்திற்கான ஒரு உலகளாவிய மையமாக மாற்ற உதவும். பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மீனவ சகோதரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சென்னை மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்குவது, தமிழ்நாட்டில் கடற்பாசிப் பூங்காவை உருவாக்குவது போன்ற முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு ஆதரவளித்து வருகிறது. கிசான் கடன் அட்டை திட்டத்தின் மூலம், மீனவர்கள் இப்போது தங்களது தொழில் செயல்பாடுகளுக்கான மூலதனத்தை எளிதாகப் பெற முடிகிறது. வளர்ச்சியடைந்த தமிழகத்தின் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் இலக்கை நாம் இணைந்து நனவாக்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

# இந்தியாவுக்கு எதிராக எங்கள் நிலம், வான்பரப்பு பயன்படுத்தப்படாது - இலங்கை அதிபர் உறுதி

சென்னை 13, அக்டோபர் 2026: இலங்கையின் நிலப்பரப்போ அல்லது வான்பரப்போ இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பயன்படுத்த அனுமதிக்கப்படாது என இலங்கை அதிபர் அநுர குமார திஸாநாயக்க கூறி உள்ளார்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய இலங்கை அதிபர் திஸாநாயக்க, தனது தலைமையிலான அரசு நடுநிலை வெளியுறவுக் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றும். மேலும் எந்தவொரு ராணுவ மோதலிலும் பங்கேற்காது என உறுதிபட தெரிவித்துள்ளார்.



இலங்கையின் நடுநிலை வெளியுறவுக் கொள்கையை சுட்டிக்காட்டிய அவர், "நாம் ராணுவ பலம் கொண்ட நாடு அல்ல, எனவே எந்தவொரு ராணுவ மோதலிலும் நாம் ஒரு தரப்புக்கு ஆதரவாக மாற மாட்டோம்" என்று கூறினார். இதற்கு ஒருசில உதாரணங்களை சுட்டிக்காட்டினார். அமெரிக்க - ஈரான் மோதல்களுக்கு மத்தியில், இரு நாடுகளின் கோரிக்கைகளையும் நிராகரித்ததையும், ஈரான் போர்க்கப்பல்கள் இலங்கை துறைமுகத்தில் நங்கூரமிட விடுத்த கோரிக்கை நிராகரித்ததையும் குறிப்பிட்டார். ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு, இரு நாடுகளின் கடல்சார் மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், இலங்கை அதிபர் இவ்வாறு பேசியிருப்பது சர்வதேச நாடுகள் மத்தியில் தனிக்கவனம் பெற்றுள்ளது.



## ‘விண்டேஜ் 2’ நிதியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள விவ்ரிதி அசெட் மேனேஜ்மென்ட்; தொடங்கப்பட்டதிலிருந்து 3,400 கோடி முதலீட்டாளர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டுள்ளது

சென்னை 13, அக்டோபர் 2026: இந்தியாவின் முன்னணி தனியார் கடன் சொத்து நிர்வாக நிறுவனங்களில் (பிரைவேட் கிரெடிட் அஸெட் மேனேஜர்ஸ்) ஒன்றான விவ்ரிதி அசெட் மேனேஜ்மென்ட் (விஏஎம்), திட்டமிடப்பட்ட நிதி காலத்திற்குள்ளேயே மற்றும் நிதிகளின் இலக்குகளைப் பூர்த்தி செய்து, தனது 'விண்டேஜ் 2' நிதிகளை (மூன்று பெர்ஃபார்மிங் கிரெடிட் திட்டங்களை உள்ளடக்கியது) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன் மூலம், விஏஎம் நிறுவனம் தனது 2 நிதி விண்டேஜ்கள் வாயிலாக முதலீட்டின் மீதான அசல் மற்றும் வருமானப் பங்கீடுகள் மூலம் முதலீட்டாளர்களுக்கு ரூ.3,400 கோடிக்கும் மேல் திரும்ப வழங்கியுள்ளது. இந்த நிதிகளின் ஆயுட்காலம் பல்வேறு வணிகச் சூழல்கள், வட்டி விகிதங்கள், பணப்புழக்கம் மற்றும் புவிசார் அரசியல் பின்னணிகளைக் கொண்ட காலக்கட்டங்களைக் கடந்து செயல்பட்டுள்ளது.

விண்டேஜ் 2 நிதிகள் (விண்டேஜ் 2 ஃபண்ட்ஸ்)

விண்டேஜ் 2 நிதிகள் 2022-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்டு, அனைத்து நிதிப் பங்களிப்பு வாக்குறுதிகளையும் (கேப்பிட்டல் கமிட்மெண்ட்ஸ்) திரட்டிய பிறகு, செப்டம்பர் 2023-க்குள் தங்கள் இறுதி நிதித் திரட்டலை (ஃபைனல் க்ளோஸ்) அறிவித்தன.

இந்நிதியில் முதலீடு செய்தவர்களில் நிறுவனங்களும் (காப்பீட்டு நிறுவனங்கள், அகில இந்திய நிதி நிறுவனங்கள் - ஏஐஎஃப் ஐ) மற்றும் தனிநபர் முதலீட்டாளர்களும் (குடும்ப அலுவலகங்கள் - ஃபேமிலி ஆபீஸஸ், உயர் நிகர மதிப்புள்ள நபர்கள் - ஹெச்என்ஐ) அடங்குவர். பல்வேறு நிதி விண்டேஜ்கள் வாயிலாக, விஏஎம் நிறுவனம் மிதமான (மாடரேட்) மற்றும் பாதுகாப்பு விரும்பும் (கன்சர்வேட் டிவ்) இடர் சுயவிவரங்களைக் (ரிஸ்க் புரொஃபைல்ஸ்) கொண்ட திட்டங்களை வழங்கியுள்ளது.

தனது விண்டேஜ் 2 உத்திகளில், விஏஎம் ரூ.1,700 கோடி முதலீட்டாளர் வாக்குறுதிகளைத் திரட்டியுள்ளதுடன், இந்த நிதிகளின் வாழ்நாளில் 45-க்கும் மேற்பட்ட போர்ட்ஃபோலியோ நிறுவனங்களில் ரூ.3,500 கோடிக்கும் மேல் முதலீடு செய்துள்ளது. உள்கட்டமைப்பு (சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், டிஜிட்டல்), தூய்மை ஆற்றல் (க்ளீன் எனர்ஜி), உற்பத்தி (உரம், மின்னணு சாதனங்கள்) மற்றும் சேவைகள் (தளவாடங்கள்/ லாஜிஸ்டிக்ஸ், இணை-பணிப்பகுதிகள்/கோ-வொர்க்கிங், நிதிச் சேவைகள், எண்டர்பிரைஸ் சாஸ் - போன்ற துறைகளில் செயல்படும் வணிகங்கள் இந்நிதியின் முதலீடுகளைப் பெற்றுள்ளன.

விண்டேஜ் 2 நிதிகள் ஒட்டுமொத்தமாக ரூ.2,260 கோடிக்கும் அதிகமான தொகையை அசல் மற்றும் வருமானமாக முதலீட்டாளர்களுக்குத் திரும்ப வழங்கி, மிதமான திட்டத்தில் (மாடரேட் ஸ்கீம்) தோராயமாக 15% மொத்த உள் ஈட்டு விகிதத்தை (கிராஸ் ஐஆர்ஆர்) உருவாக்கியுள்ளன. அதே சமயம், பாதுகாப்பு விரும்பும் திட்டம் (‘ஏ’ வகைப் பாட்டில் தரமதிப்பீடு செய்யப்பட்ட போர்ட்ஃபோலியோ நிறுவனங்களில் மட்டுமே முதலீடு செய்வது) தோராயமாக 12% மொத்த உள் ஈட்டு விகிதத்தை (கிராஸ் ஐஆர்ஆர்) வழங்கியுள்ளது. கட்டணங்கள் மற்றும் செலவுகள் போக, அனைத்து முதலீட்டாளர்களுக்கும் கிடைத்த நிகர வருவாய் (நெட் ரிட்டர்ன்) மிதமான திட்டத்திற்குத் தோராயமாக 13% ஆகவும், பாதுகாப்பு விரும்பும் திட்டத்திற்குத் தோராயமாக 10.5% ஆகவும் இருந்தது.

## இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில், அந்நாட்டிற்குள்ளேயே விநியோகஸ்தர்களுக்கான செலவினத்தை ஏறக்குறைய இருமடங்காக உயர்த்தும் திட்டங்களை ஜிஇ ஏரோ ஸ்பேஸ் அறிவித்துள்ளது

சென்னை 13, அக்டோபர் 2026: இந்தியாவின் வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இத்துறையில் முன்னணியில் திகழவும் உதவும் வகையில், 2025 முதல் 2030 வரையிலான காலத்தில் இந்தியாவில் உள்ள விரீயோகஸ்தர்களுக்கான செலவினத்தை ஏறக்குறைய இருமடங்காக உயர்த்தும் திட்டங்களை ஜிஇ ஏரோ ஸ்பேஸ் (என்ஒய்எஸ்இ: ஜிஇ) இன்று அறிவித்தது. ‘பவரிங் ப்ராக்ரஸ்’ என்ற தலைப்பில் Ernst & Young (இஒய்) நிறுவனம் தயாரித்த புதிய அறிக்கை வெளியிடப்பட்ட அதே வேளையில் இந்த அறிவிப்பும் வெளியானது.

‘இந்தியாவில் ஜிஇ ஏரோஸ்பேஸ்-இன் பொருளாதாரத் தாக்கம்’ என்பது, வணிக ரீதியிலான விமானப் போக்குவரத்து, பாதுகாப்பு, உற்பத்தி மற்றும்பொறியியல் ஆகிய துறைகளில் இந்தியாவில் ஜிஇ ஏரோஸ்பேஸ் நிறுவனம் கடந்த நான்கு தசாப்தங்களாக ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்த முதல் விரிவான மதிப்பீடாகும். ஜிஇ ஏரோஸ்பேஸ் ஏற்பாடு செய்திருந்த ‘இந்தியா டேக்கிங் ஃபிளைட் - ஏவியேஷன், இன்னோவேஷன் அண்ட் தி ரோட் டு விக்சித் பாரத் 2047’ எனும் துறைசார் தலைவர்களின் கூட்டத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்தியாவின் உள்நாட்டு வணிக விமான நிறுவனங்கள் 2026 நிதியாண்டில் சுமார் 19 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயை ஈட்டியுள்ளன; இது நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துத் துறையின் வலிமையை வெளிப்படுத்துகிறது. மேம்பட்ட இயந்திரத் தொழில்நுட்பம் மற்றும் உயர் மட்டத்திலான நம்பகத்தன்மை மற்றும் செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றின் மூலம், சுமார் 3,70,000 நேரடி வேலைவாய்ப்புகளைத் தக்கவைக்கும் விமானப் போக்கு வரத்துச் சூழல் மண்டலத்திற்குத் தேவையான இணைப்பு மற்றும் செயல்திறனை உறுதிப் படுத்த ஜிஇ ஏரோ ஸ்பேஸ் உதவுகிறது.

அறிக்கையின்படி, டிசம்பர் 2025 நிலவரப்படி, 1,400-க்கும் மேற்பட்ட வணிக ரீதியான விமான இயந்திரங்களைக் கொண்டு, இந்தியாவில் நடைபெறும் பெரும்பாலான வணிக விமானச் சேவைகளுக்கு ஜிஇ ஏரோஸ்பேஸ் மற்றும் அதன் கூட்டாளிகள்* தயாரித்த இயந்திரங்களே ஆற்றல் அளிக்கின்றன. இந்த இயந்திரங்கள், இந்திய விமான நிறுவனங்கள் உலகிலேயே மிக உயர்ந்த பயணிகள் நிரப்பு விகிதத்தை 88.2% ஆகவும், தினசரி 12 முதல் 14 மணிநேரம் வரையிலான விமானப் பயன்பாட்டு விகிதத்தையும் எட்ட உதவியுள்ளன; இவை உலகளாவிய சராசரி அளவுகளை விட மிக அதிகமாகும்.

“இந்தியாவின் வர்த்தக விமானப் போக்குவரத்து வளர்ச்சி, உலகிலேயே மிக வேகமான ஒன்றாகும். மேலும், என்ஜின்களை விற்பனை செய்வதையும் தாண்டி இதில் எங்களின் அர்ப்பணிப்பு விரிந்துள்ளது என்பதை இன்றைய அறிக்கை காட்டுகிறது,” என்று ஜிஇ ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அதிகாரி விக்ரம் ராய் கூறினார். “புனேவில் இயந் திரத்தால் செதுக்கப் படும் பாகங்களிலும், பெங்களூருவின் புத்தாக்கத்திலும், இந்தியாவின் அடுத்த தலைமுறை விண் வெளி தொழில் துறையை உருவாக்கும் எங்களின் நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர்களிடத்திலும் அந்த அர்ப்பணிப்பு அடங்கியுள்ளது. இந்தியா தனது ‘விக்ஷித் பாரத்’ இலக்குகளை நோக்கிச் செயல்படும் வேளையில், விநியோகச் சங்கிலிச் சூழலமைப்பை வளர்ப்பதற்காக எங்களின் செலவினங்களை இரட்டிப்பாக்குவது, அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவும்.”

## வடபழனி மெட்ரோ ரயில் நிலையங்களை இணைக்கும் ஸ்கைவாக்! ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அமைப்பு!



சென்னை 13, அக்டோபர் 2026: சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்ட வழித்தடத்தில் உள்ள வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தையும், இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் பூந்தமல்லி - போரூர் - வடபழனி வழித்தடத்தையும் இணைக்கும் வகையில், சுமார் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் பிரத்யேக ஸ்கைவாக் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்கைவாக், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் சேவை தொடங்கியுள்ள நிலையில், பயணிகள் ஒரு வழித்தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்திற்கு எளிதாக மாறிச் செல்லும் வகையில் முக்கிய இணைப்புப் பாலமாக அமைகிறது.

நேற்று பூந்தமல்லி - போரூர் இடையேயான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் மஞ்சள் வழித்தடச் சேவையைப் பிரதமர் நரேந்திர மோடி பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைத்தார். இதையடுத்து, பூந்தமல்லி மற்றும் வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு இந்த ஸ்கைவாக் கூடுதல் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஸ்கைவாக் மூலம் வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இறங்கும் பயணிகள், சாலையில் இறங்கி போக்குவரத்து நெரிசலைக் கடக்க வேண்டிய அவசியமின்றி, மற்றொரு வழித்தடத்திற்குச் செல்ல முடியும். மேலும், கட்டணக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்தபடியே ஒரு வழித்தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்திற்கு மாறிச் செல்லும் வகையில் இந்த வசதி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கூடுதலாக டிக்கெட் எடுக்க வேண்டிய தேவையும் தவிர்க்கப்படுகிறது.

மேலும், வடபழனி சந்திப்பில் பாதசாரிகள் சாலையைக் கடக்கும் போது ஏற்படும் சிரமங்களைக் குறைத்து, பாதுகாப்பான முறையில் மெட்ரோ ரயில் நிலையங்களைச் சென்றடைய இந்த ஸ்கைவாக் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதிலும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோருக்கு வசதியான பயண அனுபவத்தை வழங்குவதிலும் இது போன்ற இணைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கும் எனக் கருதப்படுகிறது.

## சிறந்த பாரம்பரிய மருத்துவத்திற்காக ஒருங்கிணைந்த அமெரிக்க பல்கலைக்கழகம் சார்பில் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட நாமக்கல் அக்குபஞ்சர் மருத்துவர் ரேவதி கார்த்திக்!

சென்னை 13, அக்டோபர் 2026: ஒருங்கிணைந்த அமெரிக்க பல்கலைக் கழகம் (யுனைடெட் அமெரிக்கன் யுனிவர்சிட்டி) சார்பில் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கும் விழா சென்னை தியாகராய நகர், ஸ்ரீ கிருஷ்ண கானா சபாவில் உள்ள அரங்கில் சிறப்புற நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் சாதனை புரிந்தவர்களுக்கு பெருமைமிகு மதிப்புறு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பேராசிரியர். மருத்துவர் ப. ரேவதி கார்த்திக் அவர்களுக்கு பாரம்பரிய மருத்துவ சேவைக்காக சிறந்த அக்குபஞ்சர் மருத்துவர் என்னும் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் ஏழு வருடத்திற்கும் மேலாக 7000 நோயாளிகளுக்கு சுகர்,பிரஷர், தைராய்டு மற்றும் உடம்பில் உள்ள அனைத்து வலிகளுக்கும் நிரந்தர தீர்வு கொடுத்ததற்காகவும். வறுமைக்கோட்டிற்க்கு கீழ் உள்ள எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்தமைக்காகவும், கைவிடப்பட்ட பெண்களுக்கு இலவச சிகிச்சை அளித்து அவர்கள் உயிர் காத்தமைக்காகவும், தவெக மதுரை




மாநாட்டிலிருந்து தாராபுரம் வரை உயிர் காக்கும் சேவை புரிந்து, முக்கியமாக நாமக்கல் மாவட்டத்தில் நடந்த பிரச்சாரத்தில் மிக மோசமான கூட்ட நெரிசல் இருந்தாலும் அங்கும் ஒரு உயிர் கூட போகாமல் முழுக்க முழுக்க இந்த உயிர் காக்கும் தமிழர்களின் பாரம்பரிய மருத்துவமாம் குத்தூசி மருத்துவம், அக்குபிரஷர் மருத்துவம் இவற்றை வைத்தே 300 முதல் 400 வரை பொதுமக்களின் உயிர்களை பாதுகாத்தமைக்கு பாராட்டும் விதமாக ஒருங்கிணைந்த பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## ஆர்யாவின் 'ஹலோ காதல்' டீசர் வெளியானது; டிசம்பர் 4-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது இந்த ரொமான்டிக் என்டர்டெய்னர்!

சென்னை 13, அக்டோபர் 2026: 'பிரணய விலாசம்' புகழ் நிகில் முரளி இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படம், கதாநாயகனாக ஆர்யா நடிக்கும் 40-ஆவது திரைப்படமாகும். இதில் நிகிலா விமல் மற்றும் வைஷ்ணவி சைதன்யா முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஆர்யா நடிப்பில் உருவாகியுள்ள ஹலோ காதல் திரைப்படத்தின் டீசர் தற்போது வெளியாகியுள்ளது. டிசம்பர் 4, 2026 அன்று திரையரங்குகளில் வெளியாகத் தயாராகி வரும் இந்தப் படத்தின் காதல் உலகத்தை டீசர் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. கதாநாயகனாக ஆர்யா நடிக்கும் 40-ஆவது திரைப்படம் என்ற சிறப்பைப் பெற்றுள்ள இப்படத்தை, 'பிரணய விலாசம்' திரைப்படத்தின் மூலம் அறியப்படும் இயக்குநர் நிகில் முரளி இயக்கியுள்ளார். மேலும், நிகிலா விமல் மற்றும் வைஷ்ணவி சைதன்யா ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இதனால், இந்தக் காதல் பொழுதுபோக்குத் திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆர்யாவின் பிறந்த நாளை முன்னிட்டு, இப்படத்தைப் பற்றிய அறிவிப்பைத் தயாரிப்புக் குழுவினர் வெளியிட்டனர். அப் போது, "காதல் தனது முதல் அடியை எடுத்து வைக்கிறது" என்ற சுவாரஸ்யமான வாசகத்தையும் குறிப்பிட்டிருந்தனர்.




அன்றிலிருந்து, ஆர்யாவை ஒரு புதிய காதல் கதாபாத்திரத்தில் காண ஆர்வமாக இருக்கும் ரசிகர்கள் மத்தியில் இப்படம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது டீசர் வெளியாகியுள்ள நிலையில், ஹலோ காதல் திரைப்படத்தின் உலகத்தைப் பற்றிய புதிய பார்வையை வழங்குகிறது. இதன் மூலம், படத்தின் திரையரங்கு வெளியீட்டுக்கான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

ஆர்யா மற்றும் சாயிஷா இணைந்து தங்களது தயாரிப்பு நிறுவனமான தி ஷோ பீப்பிள் சார்பில், கிஷோர் டி. உடன் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளனர். காதலை மையமாகக் கொண்ட திரையரங்குப் பொழுதுபோக்குத் திரைப்படமாக உருவாகியுள்ள ஹலோ காதல், திறமையான கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரை ஒன்றிணைத்துள்ளது. தற்போது டீசர் வெளியாகி, வெளியீட்டுத் தேதியும் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இப்படம் டிசம்பர் 4, 2026 அன்று திரையரங்குகளில் ரசிகர்களைச் சந்திக்கத் தயாராகி வருகிறது.

## திருவிளையாடல் ? டிஜிட்டல் புதுப்பொலிவுடன் மறுவெளியீடு

சென்னை 13, அக்டோபர் 2026: 1965ஆம் ஆண்டு வெளியான பழம்பெரும் தமிழ் திரைப்படமான 'திருவிளையாடல்', டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் புதுப்பொலிவுடன் மீண்டும் திரையரங்குகளில் வெளியாகிறது.

அருட்செல்வர் ஏ.பி. நாகராஜன் இயக்கத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உள்ளிட்ட முன்னணி கலைஞர்களின் சிறப்பான நடிப்பில் உருவான திருவிளையாடல், தமிழ் சினிமாவின் முக்கியமான படைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. திருவிளையாடற் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இப்படம், சிவபெருமானின் பல்வேறு திருவிளையாடல்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டிலேயே கதை, வசனம், நடிப்பு, இசை ஆகியவற்றுடன், அக்காலத்திற்கேற்ற நவீன தொழில்நுட்பங்களையும் திறமையாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட திரைப்படம் திருவிளையாடல். சிறப்பான கதை சொல்லல், வலுவான கதாபாத்திரங்கள், சிறந்த நடிப்பு, இசை மற்றும் பாடல்கள் என பல்வேறு அம்சங்களால் இப்படம் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளது.

பல ஆண்டுகள் கடந்தும் இப்படத்தின் தரமும் தனித்துவமும் குறையாமல், இன்றளவும் பல தலைமுறையினராலும் விரும்பி ரசிக்கப்படும் படைப்பாக *திருவிளையாடல்* திகழ்கிறது. அதன் சிறப்பை குறைத்து மதிப்பிடுவதற்கே இடமில்லாத அளவிற்கு ரசிகர்களின் மனதில் நிலைத்திருக்கும் இப்படம், தமிழ் சினிமாவின் குறிப்பிடத்தக்க திரைச்செல்வங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

தற்போது திருவிளையாடல் திரைப்படம் டிஜிட்டல் முறையில் புதுப்பிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட காட்சி மற்றும் ஒலி தரத்துடன் மீண்டும் திரையரங்குகளுக்கு வருகிறது. பழம்பெரும் திரைப்படத்தின் அசல் தன்மையைப் பாதுகாத்தபடி, இன்றைய பார்வையாளர்கள் பெரிய திரை




யில் சிறந்த தொழில்நுட்பத் தரத்துடன் அனுபவிக்கும் வகையில் இந்த டிஜிட்டல் புதுப்பிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 99-வது பிறந்தநாளை முன்னிட்டு, அக்டோபர் 1-ஆம் தேதி சென்னை காசினோ திரையரங்கில், திருவிளையாடல் திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவிளையாடல் - படத்தின் விவரங்கள்

திரைப்படம் : திருவிளையாடல், வெளியான ஆண்டு : 1965, இயக்கம் : அருட்செல்வர் ஏ.பி. நாகராஜன், தயாரிப்பு : ஏ.பி. நாகராஜன், மறுவெளியீடு : ஸ்ரீ பால விநாயகர் பிக்சர்ஸ், மறுவெளியீட்டு பொறுப்பு : ஜி. லதா, திரைப்பட வெளியீட்டு ஒருங்கிணைப்பாளர் : பி.வி. முரளி, இசை : கே.வி. மகாதேவன், பாடல்கள் : கவிஞர் கண்ணதாசன், ஒளிப்பதிவு : கே.எஸ். பிரசாத், படத்தொகுப்பு : ஆர். தேவராஜன்.

நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழு ;

முக்கிய நடிகர்கள் :

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சாவித்திரி, கே.பி. சுந்தராம்பாள், டி.எஸ். பாலையா, ஆர். முத்துராமன், நாகேஷ், தேவிகா, மனோரமா, பாலாஜி, டி.ஆர். மகாலிங்கம், மற்றும் பலர்.

## குற்றவாளிகள்' – பழிவாங்கும் வேட்டையில் அதிரடி ஆக்ஷன் த்ரில்லர்!

சென்னை 13, அக்டோபர் 2026: டோனி ஜா நடிப்பில், குடும்பத்தை இழந்த ஒரு மனிதனின் பழிவாங்கும் போராட்டத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள அதிரடித் திரைப்படம் 'குற்றவாளிகள்'!

2026-ஆம் ஆண்டின் அதிரடித் திரைப்படமாக வெளியாகவுள்ள குற்றவாளிகள், குடும்பத்தை இழந்த ஒரு மனிதனின் துயரம், கோபம், பழிவாங்கும் உணர்வு மற்றும் நீதியைத் தேடும் போராட்டத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. முய் தாய் தற்காப்புக் கலையில் தேர்ச்சி பெற்ற பாய் ஆன் என்ற வீரர், தனது குடும்பத்தின் மரணத்திற்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து அவர்களை எதிர்கொள்ளும் பயணமே இப்படத்தின் கதையாக அமைந்துள்ளது.

தனது குடும்பத்தின் மரணத்திற்குப் பின்னால் இருக்கும் உண்மையைக் கண்டறிந்து, அதற்குக் காரணமானவர்களைப் பொறுப்பேற்கச் செய்ய பாய் ஆன் தனது சண்டைத் திறன்களின் உச்சத்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், பழிவாங்கும் வெறி அவரை முழுமையாக ஆட்கொள்ளும்போது, நீதிக்கும் பழிவாங்குதலுக்கும் இடையிலான எல்லை மங்கத் தொடங்குகிறது.

கொடூரமான நேரடிச் சண்டைகள், அதிரடியான மோதல்கள் மற்றும் பரபரப்பான ஆக்ஷன் காட்சிகளுடன், தனது குடும்பத்தை இழந்ததற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராகப் போராடும் ஒரு மனிதனின் தீவிரமான




பயணத்தை 'குற்றவாளிகள்' திரைப்படம் விவரிக்கிறது. குடும்ப இழப்பால் ஏற்படும் வலியையும், நீதியைத் தேடும் போராட்டத்தில் அவர் எதிர்கொள்ளும் ஆபத்துகளையும் பழிவாங்கும் உணர்வால் ஏற்படும் மோதல்களையும் இணைத்து இப்படம் ஒரு அதிரடி ஆக்ஷன் த்ரில்லராக உருவாகியுள்ளது.

நடிகர்கள் : டோனி ஜா. பிலிப் கியூங், சென் டுவோ-யி, ஈசன் ஹங், ஷிங் யூ, பெங் போ, யூ போலின், மாவோ ஃபான்

தொழில்நுட்பக் கலைஞர்கள் : இயக்கம்: செங் சி-யூ. திரைக்கதை: குவோ ஹைவென், தயாரிப்பாளர்கள்: ஜீ லி, யாங் யான் லிங், லின் ஜென் ஷாவோ. தயாரிப்பு நிறுவனங் கள்: யூகூ, டிஎம்ங் பிக்சர்ஸ்.

## கருணாஸ்– '8 தோட்டாக்கள்' வெற்றி இணைந்து நடிக்கும் 'ரேவன்'

சென்னை 13, அக்டோபர் 2026: பொன்ஃபோர்ட் கிரியேட்டிவ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் செல்லமுத்து குப்புசாமி தயாரிக்கும் புதிய திரைப்படம் 'ரேவன்'. இப்படத்தின் தொடக்கவிழா பூஜை சமீபத்தில் நடைபெற்றதைத் தொடர்ந்து, படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

'ரேவன்' படத்தில் நடிகர்கள் கருணாஸ் மற்றும் '8 தோட்டாக்கள்' வெற்றி முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இவர்களுடன் வாணி போஜன், அனுமோல், ரவீனா, விஷ்வமித்ரன், 'ராட்சசன்' வினோத் சாகர், சரவணன் ஷக்தி, சுபத்ரா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். சேதுராஜன் ராஜகோபால் மற்றும் ஆர்.வி. சரண் ஆகியோர் ஒளிப்பதிவாளர்களாகப் பணியாற்றுகின்றனர். வே. வெற்றிவேல் சந்திரசேகர் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இவர் சமீபத்தில் ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியான 'ஆபிஸ்' வெப் தொடருக்கு கதை, திரைக்கதை மற்றும் வசனம் எழுதியவர். மேலும் 'பீட்ஷா 3' திரைப்படத்திற்கும் கதை, திரைக்கதை மற்றும் வசனம் எழுதியுள்ளார்.

படம் குறித்து இயக்குநர் வே. வெற்றிவேல் சந்திரசேகர் கூறியதாவது:

"ரேவன்' ஒரு க்ரைம் த்ரில்லர் திரைப்படம். எழுத்தாளர் நந்தன் ஸ்ரீதரன் எழுதிய 'படுகளக் காதை' நாவலைத் தழுவி இப்படத்திற்கான கதையை உருவாக்கியிருக்கிறேன். குறிப்பாக, சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் சுமார் 30 கொலை மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளுடன் தொடர்புடையதாகக்



கூறப்பட்ட ஒரு தொடர் கொலையாளி கைது செய்யப்பட்ட உண்மைச் சம்பவத்தின் தாக்கமும் இந்தத் திரைக்கதையின் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. அந்த உண்மைச் சம்பவத்தை அப்படியே பதிவு செய்யாமல், அதன் தாக்கத்தில் ஒரு விறுவிறுப்பான க்ரைம் த்ரில்லர் திரைக்கதையை உருவாக்கியிருக்கிறோம்.

க்ரைம் த்ரில்லருக்கான விறுவிறுப்பைத் தாண்டி, நமது சமூகத்தில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருக்கும் ஒரு முக்கியமான சமூகப் பிரச்னையையும் 'ரேவன்' அழுத்தமாகப் பேசுகிறது" என்றார்.

'ரேவன்' - தொழில்நுட்பக் குழு ; நடிகர்கள்: கருணாஸ், வெற்றி, வாணிபோஜன், அனுமோல், ரவீனா, விஷ்வமித்ரன், 'ராட்சசன்' வினோத் சாகர், சுபத்ரா, சரவணன் ஷக்தி மற்றும் பலர், தயாரிப்பு: பொன்ஃபோர்ட் கிரியேட்டிவ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பாளர்: செல்லமுத்து குப்புசாமி, எழுத்து இயக்கம்: வெற்றிவேல் சந்திர சேகர் வே, ஒளிப்பதிவு: சேதுராஜன் ராஜ கோபால் & ஆர்.வி. சாண், படத்தொகுப்பு: சா.சிவப்பிரகாஷ், கலை இயக்கம்: வாசுதேவன், ஸ்டண்ட்: தினேஷ் காசி, பிஆர்ஓ: ரியாஷ் அஹமத், தயாரிப்பு நிர்வாகம்: கண்ணன் ஜி.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## 'ராமாயணா' திரைப்படத்தின் முதல் பாகம் நவம்பர் 5 அன்று உலகம் முழுவதும் வெளியாகிறது!



சென்னை 13, அக்டோபர் 2026: நவராத்திரி பண்டிகையின் முதல் நாளில் 'ராமாயணா' திரைப்படத்தின் புதிய போஸ்டரை வெளியிட்டு, நவம்பர் 5 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த புதிய போஸ்டரில் 'இது ராமர் யுகத்தின் தொடக்கம்' என்ற வசனம் இடம் பெற்றிருக்க அதில் ராமராக ரன்பீர் கபூர், சீதையாக சாய் பல்லவி, லட்சுமணனாக ரவி துபே, ராவணனாக ராக்கிங் ஸ்டார் யஷ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரண்டு பாகங்களாக உருவாகும் இந்தப் பிரம்மாண்ட இதிகாசத் திரைப்படத்தின் முதல் பாகத்தின் முன்பதிவு தசரா பண்டிகையின்போது தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதையின் மையக் கதாபாத்திரங்களுக்கு இடையிலான காட்சி ரீதியான வேறுபாட்டை இந்தப் போஸ்டர் அழுத்தமாக வெளிப்படுத்துகிறது. பிரம்மாண்டமான அரங்க அமைப்புகள், ஆடைகள் மற்றும் நுணுக்கமான வடிவமைப்புகள் என இரண்டு பாகங்களாக உருவாகும் இந்த இதிகாசத் திரைப்படத்தின் உலகத்தைப் பற்றிய முன்னோட்டத்தையும் இந்தப் போஸ்டரில் பார்க்கலாம்.

சமூக வலைதளங்களில் இந்த அறிவிப்பைப் பகிர்ந்த படக்குழு, அதனுடன் பின்வரும் பதிவையும் வெளியிட்டுள்ளது, 'நவராத்திரியின் புனிதமான இந்த நன்னாளில், ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தைக் கொண்டாடுகிறோம். இது ராமர் யுகத்தின் தொடக்கம்! நமித் மல்ஹோத்ராவின் 'ராமாயணம்' முதல் பாகம், நவம்பர் 5 முதல் உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் அனைத்து பிரீமியம் திரையிடல் தொழில்நுட்பங்களிலும் வெளியாகிறது. தசரா அன்று முன்பதிவு தொடங்குகிறது' எனக் குறிப்பிட்டுள்ளது.

நிதேஷ் திவாரி இயக்கத்தில் உருவாகியிருக்கும் 'ராமாயணா' திரைப்படத்தை, நமித் மல்ஹோத்ராவின் பிரைம் ஃபோகஸ் ஸ்டுடியோஸ் நிறுவனம், எட்டு ஆஸ்கர் விருதுகளை வென்ற டினுன் இஜி நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கிறது. யஷ்ஷின் மான்ஸ்டர் மைண்ட் கிளியேஷன்ஸ் நிறுவனமும் இப்படத்தை தயாரிக்கிறது. இரண்டு பாகங்களாக உருவாகும் இந்தப் பிரம்மாண்டத் திரைப்படத்தின் முதல் பாகம், நவம்பர் 5, 2026 அன்று உலகம் முழுவதும் வெளியாகிறது. இரண்டாம் பாகம் 2027 ஆம் ஆண்டு தீபாவளி யன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இந்தத் திரைப்படம் இந்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

ஐமேக்ஸ் தொழில்நுட்பத்திலும் படம் திரையிடப்பட உள்ளது. இந்தியாவைத் தவிர்த்து உலகளாவிய விநியோகப் பொறுப்பை சோனி பிக்சர்ஸ் நிறுவனம் ஏற்றுள்ளது. பாலிவுட் சந்தைக்கான விநியோகப் பொறுப்பை தர்மா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் கவனிக்கிறது.

## 'ஹைக்கூ' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா!



சென்னை 13, அக்டோபர் 2026: விஷன் சினிமா ஹவுஸ் சார்பில் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோர் தயாரிப்பில், யுவராஜ் சின்னசாமி இயக்கத்தில் நடிகர்கள் ஏகன், ஸ்ரீதேவி மற்றும் ஃபெமினா ஜார்ஜ் ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் திரைப்படம் 'ஹைக்கூ'. வரும் அக்டோபர் 23ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ள இத்திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது.

அமைச்சர் ராஜ் மோகன், "தளபதியுடைய பல படங்கள் ஓடிய திரையில் என்னுடைய தம்பி ஏகன் படம் வெளியாகவிருப்பதும் மகிழ்ச்சி. கடின உழைப்பாளி ஏகன். இயக்குநர், படக்குழு மற்றும் இன்றைய நாயகன் சித்து என எல்லோருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். நல்ல கருத்துகளோடு பொழுதுபோக்கு அம்சமும் சேர்ந்திருக்கும் படங்கள் சமீபத்தில் வெளியாகவில்லை. 'ஹைக்கூ' அந்த குறையை போக்கும். படம் மிகப்பெரும் வெற்றி அடைய வாழ்த்துக்கள்".

தயாரிப்பாளர் கலைப்புலி தாணு, "இரண்டு கதாபாத்திரங்களுக்கிடையே ஆன மனஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் துல்லியமாக படமாக்கி இருக்கிறார்கள். அதற்கு சித்து அற்புதமான இசை கொடுத்திருக்கிறார். பாடல்களும் சிறப்பாக உள்ளது. படம் மிகப்பெரும் வெற்றியடையும். ஏகன் பெரிய இடத்தை அடைவார்".

பாடலாசிரியர் மோகன்ராஜா, "இந்த டைட்டிலுக்கே இயக்குநருக்கு வாழ்த்துக்கள். ஹைக்கூ என்பது ஒரு தரிசனம், அன்பு. எனக்கு பல ஹைக்கூ கவிதைகள் பிடிக்கும். இந்த தலைமுறைக்கும் ஹைக்கூ கொண்டு போய் சேர்க்க வேண்டும். இந்தப் படத்தில் வாய்ப்பு கொடுத்த சித்துவுக்கு நன்றி. ஏகன் இன்னும் பெரிதாக ஜெயிக்க வேண்டும்".

இசையமைப்பாளர் சித்துகுமார், ""ஹைக்கூ' என்னுடைய 15 ஆவது படம். குடும்பம், நண்பர்களுக்கு நன்றி. விஷன் சினிமா ஹவுஸ் எப்போதுமே எனக்கு ஸ்பெஷல். ஏகன் இனிமையானவர். தமிழ் சினிமாவில் பெரிய இடத்திற்கு செல்வார். நடிகர்கள் மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி. படம் நிச்சயம் அனைவருக்கும் பிடிக்கும்".

இயக்குநர் யுவராஜ், " பெரிதாக எந்த கண்டிஷனும் சொல்லாத தயாரிப்பாளர் அருள் சார். அவருக்கு நன்றி. ஒத்துழைப்பு கொடுத்த படக்குழுவினருக்கு நன்றி. சித்துவின் ஆல்பம் சிறப்பாக வந்துள்ளது. என்னை நம்பி நான் சொன்னதை எல்லாம் செய்த ஏகன், ஃபெமினா, ஸ்ரீதேவிக்கு நன்றி".

தயாரிப்பாளர் அருளானந்து, "விஷன் சினிமா ஹவுஸின் மூன்றாவது படம் இது. சினிமாவில் தெரிவதற்காக 18 வருட உழைப்பை கொடுத்திருக்கிறார் ஏகன். நன்றாக நடித்தால் மட்டுமே சினிமாவில் நீடிக்க முடியும் என ஏகனிடம் சொல்லியிருக்கேன். என்னிடம் சொன்னதை அப்படியே யுவராஜ் எடுத்திருக்கிறார். எனக்கு படம் ரொம்ப பிடித்திருக்கிறது. விஷன் சினிமாவின் அடுத்து ஐந்து படங்களுக்கும் சித்துதான் இசையமைப்பாளர். இசையும் கவிதை போல வந்திருக்கிறது. படத்தில் உழைத்த அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்".

## 'சிக்னல் அட் 11:30' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகும் நடிகை புஜிதா பொன்னாடா!



சென்னை 13, அக்டோபர் 2026: மலர்விழி நடேசன் எழுத்து இயக்கத்தில், டி. இமான் இசையமைப்பில், அலர் ஸ்டுடியோஸ் சார்பில் மலர்விழி நடேசன் மற்றும் ஷிவானி சுப்ரமணி இணைந்து தயாரித்துள்ள 'சிக்னல் அட் 11:30' திரைப்படம் வரும் அக்டோபர் 30 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது. இந்தத் திரைப்படத்தில் சந்தோஷ் பிரதாப், புஜிதா பொன்னாடா மற்றும் பவ்யா திரிகா ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும், இப்படத்தில் முனீஷ்காந்த், ஜெயப்பிரகாஷ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

'சிக்னல் அட் 11:30' திரைப்படம் தனது திரைப்பயணத்தில் முக்கியமான மைல்கல் என்கிறார் புஜிதா. ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் பிறந்த புஜிதா, இந்தியாவின் பல்வேறு நகரங்களில் வளர்ந்தார். கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்ட குடும்பச் சூழலில் வளர்ந்த புஜிதா, சென்னையில் கணினி அறிவியல் பொறியியல் படிப்பை முடித்தார். பின்னர் ஹைதராபாத்தில் மென்பொருள் பொறியாளராகப் பணியில் சேர்ந்தார்.

கல்வி மற்றும் வேலைக்கு இடையில் ஓவியம், நடனம் என கலை மீதும் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்தது. இந்நிலையில், குறும்படங்களில் நடிக்குமாறு ஒரு இயக்குநர் அவரை அணுகியபோது, எதிர்பாராத விதமாக நடிப்புத் துறைக்குள் நுழைந்தார். அங்கிருந்து திரைத்துறைக்குள்ளும் அவர் அடியெடுத்து வைத்தார்.

ஒவ்வொரு திரைப்படமும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும், தனக்குள் இருக்கும் புதிய பரிமாணங்களைக் கண்டறியவும், நடிப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமைவதாக அவர் கூறுகிறார்.

சினிமாவை தாண்டி புத்தகங்கள் வாசிப்பது, பயணம் செய்வது, கதைகளைக் கேட்பது, இசைக் கச்சேரிகள் மற்றும் நேரடி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, புதிய கஃபேக்கள் மற்றும் உணவகங்களைத் தேடிச் செல்வது, சூரிய அஸ்தமனத்தை ரசிப்பது ஆகியவை புஜிதாவுக்கு பிடித்தமானவை. உணவுப் பிரியரான அவர், புதிய உணவு வகைகளைச் சுவைத்துப் பார்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர். மேலும், நடிகர் சூர்யாவின் தீவிர ரசிகை புஜிதா.

அக்டோபர் 30 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள 'சிக்னல் அட் 11:30' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும் என்றும், தமிழ் சினிமாவில் தனது திரைப்பயணத்தின் புதிய அத்தியாயத்துக்குத் தொடக்கமாக அமையும் என்றும் புஜிதா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## இந்திய கடற்படையில் இணைந்தது புதிய 'ஐஎன்எஸ் மாங்க்ரோல்' போர்வாள்!



சென்னை 13, அக்டோபர் 2026: இந்திய கடற்படையை நவீனப்படுத்தி பலப்படுத்தும் முயற்சியில் மற்றொரு மைல்கல்லாக, 'ஐஎன்எஸ் மாங்க்ரோல்' எனும் புதிய போர்வாள் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. 'மாகே' வகுப்பைச் சேர்ந்த இந்த 3-வது போர்க்கப்பல், கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து அழிக்கும் திறனில் இந்தியாவிற்குப் பெரும் பலம் சேர்க்கும்.

கொச்சின் ஷிப்யார்ட் நிறுவனத்தால் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட 8 'ASW Shallow Water Craft' கப்பல்களில் இதுவும் ஒன்றாகும். இதன் 80% சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. ஆழமற்ற கடற்பகுதியிலும் சத்தமில்லாமல் சென்று மிகத் துல்லியமாகத் தாக்குதல் நடத்தும் திறன் கொண்டது. குஜராத் மாநிலத்தில் உள்ள துறைமுக நகரமான மாங்க்ரோலின் நினைவாக இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

கப்பலின் முக்கிய அம்சங்கள்:

அளவீடுகள்: 78 மீட்டர் நீளம், 11 மீட்டர் அகலம் மற்றும் 2.7 மீட்டர் மட்டுமே ஆழம் கொண்ட வடிவம். இதனால் குறுகிய மற்றும் சவாலான கடற்பகுதிகளிலும் எளிதாக இயங்க முடியும்.

வேகம்: டீசல் எஞ்சின் மற்றும் வாட்டர்-ஜெட் தொழில்நுட்பம் மூலம் அதிகபட்சமாக 25 நாட்ஸ் வேகத்தில் செல்லக்கூடும்.

பயண எல்லை: 14 நாட்ஸ் வேகத்தில் தொடர்ந்து 1,800 நாட்டிக்கல் மைல்கள் வரை பயணிக்கும்.

அதிநவீன சோனார் அமைப்புகள்:

டிஆர்டிஓ அபய் சோனார்: கப்பலைச் சுற்றியுள்ள நீருக்கடியிலான இயக்கங்களைக் கடலின் குறைந்த ஆழத்திலும் துல்லியமாகக் கண்காணிக்கும்.

எல்எஃப்விடிஎஸ் சோனார்: கடலின் வெவ்வேறு ஆழப் பகுதிகளுக்கு இறக்கிப் பயன்படுத்தி, தொலைவில் உள்ள எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களின் ஒலியைக் கண்டறிய உதவும்.

பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்கள்:

12 பீப்பாய்கள் கொண்ட எல்ஏபி ராக்கெட் லாஞ்சர்.

6 டிரிபிள் லைட் வெயிட் டார்பிடோ லாஞ்சர்கள்.

வான் மற்றும் கடல் தாக்குதலுக்கு உதவும் 30 மி.மீ நேவல் கன் மற்றும் 12.7 மி.மீ ரிமோட் கன்.

தேவைப்படும் இடங்களில் கடலடி கண்ணிவெடிகளை வைக்கும் வசதி.

பாதுகாப்பு உற்பத்தியில் இந்தியாவின் சுயசார்புத் தன்மையை உலகிற்குப் பறைசாற்றும் வகையில் அமைந்த 'ஐஎன்எஸ் மாங்க்ரோல்', நாட்டின் கடல் எல்லைகளைப் பாதுகாப்பதில் மிக முக்கியமான பங்காற்றும்.